# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1988, ஜூலை 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*1988, ஜூலை மாதம் 15 தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்.

[1988, ஜூலை மாதம் 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 31/88
1941

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். — சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவு, அதிலுள்ள "இச்சட்டத் தின் 21, 22, 23, 24அ, 25 என்னும் பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்படும் நிறுவனமொன்றல்லாத ஏதேனும் நிறுவகத்தை" என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக "ஏதேனும் நிறுவனத்தை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ள "நிறுவகமொன்று தொடர்பில் 25அ என் னும் பிரிவின்கீழ் பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையொன்றை ஆக்கு முன் அத்தகைய நிறுவகம் தொடர்பில்" என்னும் சொற்களுக்கும் எண் களுக்கும் பதிலாக "நிறுவகமொன்று தொடர்பில் 25அ என்னும் பிரிவின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவகக் கட்டளையொன்றை ஆக்குமுன் அத்த கைய நிறுவனம் தொடர்பில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவ தன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத் தின் 70இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு, அதிலுள்ள "பட்டம் வழங்கும் நிறுவகம்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதி லாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— — முதன்மைச் சட்டவாக்கத் தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.

' "பட்டம் வழங்கும் நிறுவகம்" என்பது 25அ என்னும் பிரிவின் ஏற் பாடுகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும் ; '.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.